725

சிவகாமி தமிழ் வாசகம்

இரண்டாம் வகுப்பு

6 DEC 1956
725
4-56
SCANNED
TB
031(2)
N56.
132159

... ரிஷிங் ஹௌஸ்
... குண்டம்

அணா 6

சிவகாமி தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்

[திருத்திய பதிப்பு]

ஆசிரியர்:

வித்துவான் இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா,

தமிழாசிரியர்,

சென்னைக் கிறித்தவக் கலாசாலை, சென்னை.

சிவகாமி பப்ளிஷிங் ஹௌஸ்

ஸ்ரீவைகுண்டம் :: திருநெல்வேலி ஜில்லா

பிராஞ்சு:

சேலம் & சென்னை

காப்பிரைட்] 1956 [விலை அணா 6.

திருத்திய பதிப்பு 1954.
மூன்றும் பதிப்பு 1956.

Approved by the Text Book Committee Madras
For class use.
Vide Fort St. George Gazette
Part I Page 41 dated 19—5—1954.

சிவகாமி பிரஸ், ஸ்ரீவைகுண்டம்.

முன்னுரை

'சிவகாமி தமிழ் வாசகம்' என்னும் புத்தக வரிசையில் இது இரண்டாவது புத்தகம். இதன் வரிசையில் முதல் புத்தகத்தை நினைவிற்கொண்டு அதற்கேற்றவாறு இந்நூல் படிப்படியாக மொழி வளர்ச்சி, சொல் வளர்ச்சி, பாடங்களின் வளர்ச்சி என்னும் துறைகளில் உயர்ந்து விளங்குதலைக் காணலாம்.

இப்புத்தகத்தில் முதலிலிருந்து ஒன்பது பாடங்களில் முதல் வகுப்பை மனத்திற்கொண்டு திருப்பு முறையாகப் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பத்தாவது பாடம் முதல் பாடங்களை முறைப்படுத்தி அவை இவ்வகுப்பிற் கேற்றவாறு படிப்படியே உயர்ந்து செல்லும்படி அமைக்கப்பட்டுள்ளன. இப்பாடங்களின் அடியில் அரும் பதங்கள் எடுத்துத் தரப் பட்டுள்ளன. அவற்றின் கீழ் வினாக்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அக்கேள்விகளுக்கு விடை சொல்லச் செய்யலாம்; எழுதச் செய்யலாம். அக்கேள்விகளுள் சில மாணவரின் நுண்ணறிவைச் சோதிக்கத் தக்கனவாயும் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் கீழ்ப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. அப்பயிற்சிகளை மாணவர் வீட்டிலோ வகுப்பறையிலோ செய்து பழகுதல் வேண்டும். அப்பயிற்சிகளில் சில, மாணவரின் நுண்ணறிவையும் பொது அறிவையும் விளக்கும் திறத்தனவாகும்.

பாடம் முடிந்தபின் அதன் ஈற்றில் கொடுக்கப்பட்டுள்ள அரும்பதங்களை மாணவர்கள் கற்பலகையில் எழுதும்படிச் செய்யவேண்டும்; சொல்லச் செய்து உச்சரிப்பையும் திருத்த வேண்டும். அச் சொற்களுக்கு பொருள் சொல்லவும் வேண்டும். இவ்வாறு பாடங்கள் தோறும் கொடுக்கப்பட்டிருக்கும் பயிற்சிகளை மாணவர்கள் நாள்தோறும் விடாது செய்வார்களாயின் மொழியில் பற்றும் அறிவும் பெறுவர். மற்றும் திருத்தமாகப் பேசவும், எழுதவும் மாணவர்க்கு எளிதில் இயல்வதாகும். திருத்தமாகவும் பிழையின்றியும் பேசுதலும்,

எழுதுதலும் மொழி வளர்ச்சிக்கு அடிப்படை. அவையே தமிழ் மொழியின் மேம்பாட்டிற்குத் தேவை. அவற்றைப் புகட்டுவதே இப்பாடப் புத்தகங்களின் நோக்கமாகும்.

ஆதலால், இவ்வரிசைப் புத்தகங்களைக் கண்ணுறும் ஆசிரியர்களும், கல்வி இலாகா அதிகாரிகளும் இவ்வாசக வரிசைகளைப் பாடப் புத்தகங்களாக்கி மாணவர்களுக்கு நலம் உண்டாகச் செய்வதோடு என்னையும் இத்துறையில் ஊக்கு வார்கள் என்று நம்புகிறேன்.

இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா.

பொருளடக்கம்

எண்	பாடம்		பக்கம்
1.	சொற்றொடர்கள்	...	10
2.	ஒலிகள்	...	11
3.	அடுக்கு மொழிகள்	...	14
4.	எங்கள் வகுப்பு	...	16
5.	நிறங்கள்	...	17
6.	விடை சொல்	...	18
7.	பந்து ஆட்டம்	...	19
8.	கும்மி அடித்தல்	...	20
9.	வலது, இடது	...	21
10.	எங்கள் ஊர்	...	22
11.	பொம்மைக் கலியாணம்	...	24
12.	தினசரி வேலைகள்	...	25
13.	பாம்பும் காகமும்	...	28
14.	அணில்	...	31
15.	தோட்டம்	...	34
16.	தென்னை மரம்	...	37
17.	ஆடுகள்	...	40
18.	ஐந்து பிராணிகள்	...	43
19.	பறவைகள்	...	44
20.	கிளி	...	47
21.	ஒற்றுமையே பலம்	...	50
22.	நம் நாடு	...	53
23.	நமது தேசக் கொடி	...	56
24.	விடு கதைகள்	...	57
25.	மகாத்மா காந்தி	...	58
	செய்யுட் பகுதி		
	ஆத்திசூடி	...	61
	உலகநீதி	...	63

பயிற்சி — 1.

படத்தைப் பார்; பெயரைச்சொல்; எழுது:



பயிற்சி — 2

படத்தைப் பார்; பெயரைச் சொல்; எழுது.



பயிற்சி — 3. படத்தைப் பார்.

என்ன காண்கிறாய் என்று சொல்; எழுது.



1. சொற்றொடர்கள்

அண்ணன் தம்பி

ஆற்று வெள்ளம்

இலவம் பஞ்சு

ஈச்ச மரம்

உரல் உலக்கை

ஊது குழல்

எலிப் பொறி

ஏற்றப் பாட்டு

ஐந்து ரூபாய்

ஒரு சொல்

ஓடம் பார்

ஔவைப் பாட்டி

அன்பாய் இரு

ஆலயம் செல்

இயல்வது கொடு

ஈவது நலம்

உண்மை பேசு

ஊருடன் சேர்

எல்லாரையும் நேசி

ஏற்றமாய் இரு

ஐயம் இடு

ஒன்றும் ஒளியேல்

ஓதாமல் இராதே

ஔவையார் படி

2. ஒலிகள்



குதிரை கனைக்கும்.



யானை பிளிறும்.



நாய் குரைக்கும்.

சிங்கம் கர்ஜிக்கும்.



பன்றி உறுமும்.

கழுதை கத்தும்.



காக்கை கரையும்.



சேவல் கூவும்.

மயில் அகவும்.



குயில் கூவும்.

கிளி பேசும்.

ஆந்தை அலறும்.

பயிற்சி

கோடிட்ட இடத்தில் தகுந்த சொல்லை எழுது:—

1. பால்காரன் ______ கறக்கிறான்.

2. உழவன் வயலை ______ .

3. தையல்காரன் ______ தைக்கிறான்.

4. பெண்கள் கிணற்றில் தண்ணீர் ___.

5. சிறுவன் பாடம் ______.

6. சிறுமிகள் ______ ______.

3. அடுக்கு மொழிகள்

கந்தன்

முருகன்

கந்தன் 'கல கல' என்று சிரிக்கிறான்.

முருகன் 'தட தட' என்று ஓடுகிறான்.

மழை



மோதிரம்

மழை 'சள சள' என்று பெய்கிறது.

மோதிரம் 'பளீர் பளீர்' என்று ஒளி வீசுகிறது.



பம்பரம்

துப்பாக்கி

பம்பரம் 'கிறு கிறு' என்று சுற்றுகிறது.
துப்பாக்கி 'டப் டப்' என்று வெடிக்கிறது.
நெஞ்சு 'பட பட' என்று அடிக்கிறது.
கத்தி 'பள பள' என்று மின்னுகிறது.
காற்றாடி 'கர கர' என்று சுழல்கிறது.
பலகை 'சொர சொர' என்று இருக்கிறது.
கண்ணாடி 'வழ வழ' என்று இருக்கிறது.
அவன் பல்லை 'நற நற' எனக் கடிக்கிறான்.

சிரிக்கிறான்	மழை	பளீர் பளீர் என்று
ஒளி வீசுகிறது	நெஞ்சு	பளபள என்று
சுற்றுகிறது	துப்பாக்கி	சொர சொர என்று
வெடிக்கிறது	பலகை	வழ வழ என்று
சுழல்கிறது	கண்ணாடி	நற நற என்று



4: எங்கள் வகுப்பு

1. இது எங்கள் வகுப்பு.
2. இது இரண்டாம் வகுப்பு.
3. ஆசிரியர் நின்று கொண்டிருக்கிறார்.
4. அவர் பாடம் கற்பிக்கிறார்.
5. பிள்ளைகள் பாடம் படிக்கிறார்கள்.
6. சுவரில் படம் மாட்டி இருக்கிறது.
7. அது மகாத்மா காந்தி படம்.

மகாத்மா	**ஆசிரியர்**	**படிக்கிறார்கள்**
வகுப்பு	**எங்கள்**	**பாடம்**
இரண்டாம்	**சுவர்**	**கற்பிக்கிறார்**

5. நிறங்கள்

சுண்ணும்பு	வெண்மை	நிறம்.
காகம்	கருமை	நிறம்.
இலை	பச்சை	நிறம்.
மிளகாய்ப் பழம்	சிவப்பு	நிறம்.
எலுமிச்சம் பழம்	மஞ்சள்	நிறம்.
ஆகாயம்	நீல	நிறம்.

வெள்ளி	வெண்மை	நிறம்.
பொன்	மஞ்சள்	நிறம்.
பவளம்	சிவப்பு	நிறம்.
மரகதம்	பச்சை	நிறம்.
நீலம்	நீல	நிறம்.

கழுதை	சாம்பல்	நிறம்.
வாழைப் பழம்	மஞ்சள்	நிறம்.
முற்றிய இலை	பழுப்பு	நிறம்.
யானை	கருமை	நிறம்.
மேகம்	கருமை	நிறம்.
கடல்	நீல	நிறம்

வெண்மை, கருமை, பச்சை, சிவப்பு, மஞ்சள் என்பன ஐந்து நிறங்கள். இவை பஞ்சவர்ணம் எனப்படும்

6. விடை சொல்

1. உன் பெயர் என்ன?
   என் பெயர் ____

2. உன் தந்தையின் பெயர் என்ன?
   என் தந்தையின் பெயர் ____.

3. உன் அண்ணனின் பெயர் என்ன?
   என் அண்ணனின் பெயர் ____.

4. உன் தங்கையின் பெயர் என்ன?
   என் தங்கையின் பெயர் ____.

5. இப்புத்தகத்தின் பெயர் என்ன?
   இப்புத்தகத்தின் பெயர் ____.



7. பந்து ஆட்டம்

1. இது ஒரு இரப்பர் பந்து.

2. பந்து விளையாட உதவும்.

3. அண்ணன் பந்து விளையாடுகிறான்.

4. தம்பியும் பந்து விளையாடுகிறான்.

5. அண்ணனும் தம்பியும் பந்து விளையாடுகிறார்கள்.

6. தங்கை அம்மானை ஆட்டம் ஆடுகிறாள்.

இரப்பர்பந்து	**விளையாடு**	**அண்ணன்**
அம்மானை	**ஆட்டம்**	**தம்பி**
உதவும்	**ஆடுகிறாள்**	**தங்கை**

8. கும்மி அடித்தல்

1. இந்தப் பெண்களைப் பார்.
2. இவர்கள் என்ன செய்கிறார்கள்.
3. இவர்கள் கும்மி அடிக்கிறார்கள்.
4. இங்கே எத்தனை பெண்கள் இருக்கிறார்கள்? எண்ணு.
5. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து.
6. இங்கே ஐந்து பெண்கள் இருக்கிறார்கள்.

கும்மி அடி **எண்ணு** **எத்தனை**

9. வலம், இடம்

1. இது என் வலக் கை
2. இது என் இடக் கை.
3. வலக் கையில் குடை இருக்கிறது.
4. இடக்கையில் புத்தகம் இருக்கிறது.
5. வலப் பக்கத்தில் என் தங்கை நிற்கிறாள்.
6. இடப் பக்கத்தில் என் தம்பி நிற்கிறான்.
7. உன் வலக் கையைக் காட்டு.
8. நீ எந்தக் கையால் எழுதுகிறாய்?

வலம்	**வலக்கைப் பக்கம்**	**நிற்கிறான்**
இடம்	**இடக்கைப் பக்கம்**	**நிற்கிறாள்**



10. எங்கள் ஊர்

நான் ஒரு சிறு ஊரில் பிறந்தேன். சிறு ஊருக்குக் கிராமம் என்று பெயர். பெரிய ஊருக்கு நகரம் என்று பெயர். கிராமத்தில் வீடுகள் அதிகம் இல்லை. கிராமத்தில் மக்கள் குறைவாக வசிக்கிறார்கள்.

கிராமத்தைச் சுற்றிலும் வயல்களும் தோட்டங்களும் இருக்கும். கிராமத்தில் வீடுகள் நெருக்கமாய் இரா. கிராமத்தில் சுத்தமான காற்று வீசும். கிராமவாசிகள் சுறுசுறுப்புள்ளவர்கள். அவர்கள் தம் வேலைகளைச் செம்மையாகச் செய்வார்கள்.

எங்கள் கிராமம் காந்திபுரம். அது ஓர் ஆற்றின் கரையில் உள்ளது. அவ்வூரில் ஒரு கோயில்

உண்டு. அக்கோயிலில் திருவிழாக்கள் நடக்கும். மக்கள் திருவிழாக் கண்டு மகிழ்வர்.

எங்கள் ஊரில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அதில் கிராமப் பிள்ளைகள் படிக்கிறார்கள். நானும் அதில் படிக்கிறேன்.

இந்தியா நமது தேசம். நம் தேசத்தில் கிராமங்கள் இலட்சக்கணக்காய் உள்ளன. கிராமங்களே நம் தேசத்தின் பெருமைக்கும் செழுமைக்கும் காரணம் ஆகும்.

அரும் பதங்கள்

அதிகம்	***சுற்றிலும்***	***செம்மையாக***
குறைவாக	***நெருக்கமாய்***	***மக்கள்***
வசிக்கிறார்கள்	***சுத்தமாய்***	***திருவிழாக்கள்***
பெருமை	***தொழில்கள்***	***இலட்சக்கணக்காய்***
கரை	***செழுமை***	***காரணம்***

வினாக்கள்

1. கிராமம் என்று எதற்குப் பெயர்?
2. கிராமத்தில் உள்ளன எவை?
3. கிராமத்தில் வாழ்வதின் நன்மை என்ன?
4. இந்தியாவின் பெருமைக்குக் காரணம் என்ன?

பயிற்சி — 1

1. உன் கிராமத்தைப்பற்றி ஐந்து வரிகள் எழுது.
2. கிராமத்தில் பார்ப்பனவற்றில் ஐந்து எழுது.

பயிற்சி — 2

அதிகம், குறைவாக, வசிக்கிறார்கள், பெருமை, சுற்றிலும், சுத்தமாய், காரணம், திருவிழா — இவற்றை உன் சொந்த வாக்கியங்களில்அமைத்து எழுது.

11. பொம்மைக் கலியாணம்

பொம்மைக்கும் பொம்மைக்கும் கலியாணம்
பூலோக மெல்லாம் கொண்டாட்டம்
பாவைக்கும் பாவைக்கும் கல்யாணம்
பகலும் இரவும் வேலையாம்

கொட்டகை போடுது சிலந்தி
குறடு கட்டுது கறையான்
கோலம் போடுது நண்டு

கண்ணுக்கு மை காக்கை கூட்டுது
கழுத்துக்கு ஆரம் *தத்தை கட்டுது
கொண்டைக்குப் பூ கோழி வளர்க்குது

குயில்கள் இனிய குரலிற் பாடும்
மயில்கள் நல்ல நடனம் ஆடும்

ஈக்கள் எல்லாம் இணங்கிக் கூடி
வாய்க்கு இனிய அமுது வைக்கும்

ஊராரே வாரீரோ
வந்து மணமும் காணீரோ
கண்டு வாழ்த்திப் போகீரோ.

— தேசிக விநாயகம் பிள்ளை.

* தத்தை = கிளி



12. தினசரி வேலைகள்

காலையில் சூரியன் உதிக்கிறான். சூரியன் கிழக்கில் உதயமாகிறான். சூரியன் உதித்ததும் நாம் படுக்கைவிட்டு எழுகிறோம். பல் விளக்கு கிறோம். கை கால்களைச் சுத்தம் செய்து கொள் கிறோம். நாம் அதிகாலையில் குளிக்கிறோம்.

காலையில் கடவுளை வணங்குகிறோம். பின் சிறிது உணவு உண்கிறோம். காலை வேளையில் நாம் சுறுசுறுப்பாக இருப்போம்; பாடங்களைப் படிப்போம்; பள்ளிக்கூடம் போவோம்.

பகலில் சூரியன் கடுமையாகக் காய்கிறான். சூரியன் ஒளிக்கு வெய்யில் என்று பெயர். நடுப் பகலில் சூரியன் நம் தலைக்கு நேராக உச்சியில் வருகிறான். அப்பொழுது வெய்யிலின் வெப்பம் அதிகம்.

மாலையில் வெய்யில் குறைகிறது. சூரியன் மேற்குப் பக்கத்தில் சாய்கிறான். மாலையில் பள்ளிக்

கூடம் விடுகிறார்கள். சிறுவர்கள் மாலையில் பல விளையாட்டுக்கள் விளையாடுகிறார்கள். மாலை வேளை குளிர்ச்சியாக இருக்கிறது.

சூரியன் மேற்கில் மறைகிறான். பின் இரவு வருகிறது. இருள் சூழ்கிறது. சில நாட்களில் சந்திரன் தோன்றுகிறான். சந்திரன் ஒளியை நிலவு என்கிறோம். இரவில் எல்லோரும் உண்டபின் உறங்குகிறார்கள். மாணவர்கள் சிறிது நேரம் படித்துவிட்டுத் தூங்குவார்கள். பகலில் வேலை செய்பவர்களுக்கு இரவில் ஓய்வு வேண்டும் அல்லவா?

பகலும் இரவும் சேர்ந்தது ஒரு நாள். ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம். முப்பது நாட்கள் கொண்டது ஒரு மாதம். பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு வருஷம். நாளைக் கிழமை என்பர்.

கிழமைகள்

ஞாயிற்றுக் கிழமை	புதன் கிழமை
திங்கட் கிழமை	வியாழக் கிழமை
செவ்வாய்க் கிழமை	வெள்ளிக் கிழமை

சனிக் கிழமை

தமிழ் மாதங்கள்

சித்திரை	ஐப்பசி
வைகாசி	கார்த்திகை
ஆனி	மார்கழி
ஆடி	தை
ஆவணி	மாசி
புரட்டாசி	பங்குனி

ஆங்கில மாதங்கள்

ஜனவரி	ஜுலை
பிப்பிரவரி	ஆகஸ்டு
மார்ச்சு	செப்டம்பர்
ஏப்பிரல்	அக்டோபர்
மே	நவம்பர்
ஜுன்	டிசம்பர்

அரும் பதங்கள்

உதிக்கிருன்	**வணங்கு**	**உச்சி**	**குளிர்ச்சி**
படுக்கை	**சுறுசுறுப்பு**	**வெப்பம்**	**மறைந்தான்**
உதயம்	**வெய்யில்**	**நடுப்பகல்**	**சூழ்கிறது**
அதிகாலை	**ஒளி**	**சாய்கிருன்**	**தோன்றுகிருன்**
உறங்கு	**தூங்கு**	**ஓய்வு**	**நிலவு**

வினுக்கள்

1. சூரியன் உதித்ததும் நாம் என்ன செய்கிறோம்?
2. வெய்யிலின் வெப்பம் எப்பொழுது அதிகம்?
3. சிறுவர்கள் மாலையில் என்ன செய்கிருர்கள்?
4. நிலவு என்று எதற்குப் பெயர்?
5. வாரம், மாதம், வருஷம் என்பவற்றை விளக்கு.

பயிற்சி—1

1. நீ காலையிலும் மாலையிலும் செய்வன எவை?
2. தமிழ் மாதம், கிழமைகளை எழுது.

பயிற்சி—2

கோடிட்ட இடங்களை நிரப்பு:—

மாலையில் ———— குறைகிறது. சூரியன் ————ப் பக்கத்தில் சாய்கிருன். சிறுவர்கள்—— பல விளையாட்டுக்கள் ———.மாலை வேளை——— இருக்கிறது.

13. பாம்பும் காகமும்

ஒரு பெரிய மரம் இருந்தது. அதன் கிளையில் காகம் கூடுகட்டி யிருந்தது. அது கூட்டில் முட்டை யிட்டது. மரத்தின் அடியில் ஒரு பொந்து இருந்தது. அதில் பாம்பு ஒன்று வசித்து வந்தது.

காகம் இடும் முட்டைகளைப் பாம்பு தின்று வந்தது; காகம் மிகவும் வருந்தி விசனமாய் இருந்தது. அங்கு ஒரு நரி வந்தது.

"ஏன் விசனமாய் இருக்கிறாய்?" என்று நரி காகத்தைக் கேட்டது. காகம் பாம்பைப் பற்றிக் கூறிற்று.

"இதுதானா! நீ அரண்மனைக்குப்போ. அரசி குளிக்கும்பொழுது முத்துமாலையைக் கழற்றி வைப்பாள். அதனை யாவரும் காண எடுத்து வந்து பொந்தில் போடு. சேவகர்கள் வந்து பாம்பைக் கொன்று விடுவார்கள்." என்று நரி தந்திரம் கூறிற்று.

காக்கை அரண்மனைக்குச் சென்றது. அது முத்துமாலையை யாவரும் காண எடுத்துக் கொண்டு வந்தது. சேவகர் பின் தொடர்ந்தனர். காகம் முத்து மாலையைப் பொந்தில் போட்டது.

சேவகர் அதனைப் பார்த்தனர். அவர்கள் பொந்தை இடித்து அழித்தனர், பாம்பு வெளியே சீறிக்கொண்டு வந்தது. சேவர்கள் அப்பாம்பைக் கொன்றனர். முத்துமாலையை எடுத்துச் சென்றனர். காகம் சுகமாக மகிழ்ந்து வாழ்ந்தது.

கதைப் படம்



அரும் பதங்கள்

கிளை	பல முறை	முத்து மாலை
கூடு	விசனமாய்	கழற்றி
பொந்து	அரண்மனை	சேவகர்
வருந்தியது	குளிக்கும்	சுகம்
தந்திரம்	பின்தொடர்ந்தனர்	இடித்து
அழித்தனர்	சீறி	மகிழ்ந்து

வினாக்கள்

1. காகம் எங்கு வாழ்ந்து வந்தது?

2. காகத்திற்கு என்ன துன்பம் ஏற்பட்டது?

3. நரி கூறிய தந்திரம் யாது?

4. சேவகர் யாது செய்தனர்?

5. இப்பாடத்திலுள்ள நீதி யாது?

பயிற்சி

கிளை, பொந்து, வருந்து, தந்திரம், பலமுறை, விசனமாய், பின் தொடர், மகிழ்ந்து — இவற்றை வாக்கியத்தில் அமைத்து எழுது.

14. அணில்

அணில் ஒரு சிறு பிராணி. அது மரத்தின் மேல் விரைவாய் ஓடும். நீ அணிலைப் பார்த்திருக்கிருயா? அணிலின் உடலிலும் வாலிலும் உரோமம் அதிகம். அணில் குதித்துக் குதித்து ஓடுவது பார்ப்பதற்கு அழகாய் இருக்கும்.

அணில் பழங்களையும் கொட்டைகளையும் தின்னும். அணிலின் முதுகின் மேல் மூன்று கோடுகள் உள்ளன பார். அவை உண்டானதற்கு ஒரு கதை உண்டு.

இராமர் தம் தந்தையின் சொல்லைத் தட்டாதவர். அவர் தந்தையின் கட்டளைப்படி காட்டிற்குச் சென்ருர். அங்கு அவருடைய மனைவியை இராவணன் தூக்கிச் சென்ருன். இராவணனது ஊர் இலங்கை. இராமர் மனைவி சீதை.

இலங்கைக்குச் செல்லக் கடலைக் கடக்க வேண்டும். இராமர் சீதையை மீட்டுவர இலங்கைக்குச் செல்ல வேண்டும். இடையிலுள்ள கடலுக்கு அணை கட்டினர். அதற்கு அணிலும் உதவி செய்ய வந்தது.

அணில் நீரில் மூழ்கும்; மணலில் புரளும்; மறுபடியும் நீரில் மூழ்கும். இவ்வாறு அணில் கரையிலுள்ள மணலைக் கடலில் சேர்த்தது.

அதன் செயலைக் கண்டு இராமர் மகிழ்ந்தார்.

அதன் முதுகைத் தடவிக் கொடுத்தார். அதனால் இராமரது மூன்று விரல்கள் அணிலின் முதுகில் படிந்தன. இன்றும் அம்மூன்று கோடுகளே அணிலின் முதுகில் காணப்படுகின்றன.

அணில் பழங்களை முன் கால்களால் இறுகப் பிடித்துக் கொள்ளும். அதற்கு முன் கால்கள் கைகள் போல் உதவுகின்றன. அணில் உட்கார்ந்து கொண்டு பழங்களை முன் கால்களால் பற்றிக் கொண்டு தின்னும். சிறு அணில்களை 'அணில் பிள்ளை' என்று அழைப்பர். அணில் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். அது யாருக்கும் சிறு தீங்கும் செய்யாது.

அரும் பதங்கள்

பிராணி	*தட்டாதவர்*	*அணை*
விரைவாய்	*கட்டளை*	*புரளும்*
குதித்து	*கடக்க*	*மறுபடியும்*
கொட்டை	*இடையிலுள்ள*	*மூழ்கும்*
தடவிக்கொடு	*படிந்தன*	*இறுக*
செயல்	*தீங்கு*	*அழகு*

வினுக்கள்

1. அணிலின் உடலைப்பற்றி அறிவன எவை?
2. அணில் முதுகில் மூன்று கோடுகள் உள்ளன. — இதற்குக் கூறும் கதை யாது?
3. அணிலின் உணவு யாது? எப்படித் தின்னும்?
4. அணிலின் முன் கால்களைப் பற்றி அறிவது என்ன?
5. 'அணிற் பிள்ளை' என்று எதற்குப் பெயர்?
6. அணில் கரையிலுள்ள மணலைக் கடலில் சேர்த்தது எப்படி?

பயிற்சி — 1

1. குதித்து, தடவிக்கொடு, கடக்க, புரளும், மூழ்கும் — இவைகளை அமைத்துச் சொந்த வாக்கியங்கள் எழுது.

2. அணில் மரத்தின் மேல் ஏறுவது பார்த்திருக்கிறுய் அல்லவா? இதைப்பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுது.

பயிற்சி — 2

கோடிட்ட இடங்களை நிரப்பு:—

1. இராமர் — ச் சென்றுர்.
2. அவர் தம் — சொல்லைத் — .
3. அவர் தந்தை — காட்டிற்குச் — .
4. அங்கு அவருடைய — யை இராவணன் — ச் சென்றுன்
5. இராவணன் — இலங்கை.
6. இராமர் — சீதை.

15. தோட்டம்

I

சுந்தரம்:— அப்பா, இன்ருேடு தேர்வு முடிந்தது. நான் கணக்கு, தமிழ், கையெழுத்து, கதை என்பவற்றிலும், பாராமல் ஒப்புவித்தல், எழுதுதல் என்பவற்றிலும் முதலாகத் தேர்வு பெற்றேன். என் தலைமை ஆசிரியர் எனக்கு ஒரு கதைப் புத்தகம் பரிசு அளித்தார். இந்தப் புத்தகம் எவ்வளவு அழகாக இருக்கிறது, பார்!

தகப்பனுர்:— மிகவும் மகிழ்ச்சி. நீ நல்ல பையன். இவ்வாறு நீ ஒவ்வொரு வகுப்பிலும் பரிசு பெற வேண்டும். வகுப்பிலுள்ள மாணவர்களுக்கு நீ முதல்வனுக விளங்கவேண்டும். நீ முயன்று படிக்க வேண்டும். படித்தால் பேறும் புகழும் பெறுவாய்.

சுந்தரம்:— அப்பா, அப்படியே செய்கிறேன். ஒவ்வொரு வகுப்பிலும் பரிசு பெற முயல்கிறேன்.

தகப்பனுர்:— இப்பொழுது நான் தோட்டத்திற்குப் போகிறேன். நீயும் வருகிருயா?

சுந்தரம்:— இதோ வருகிறேன். இனிப் பதினைந்து நாட்களுக்குப் பள்ளிக்கூடம் இல்லை.

தகப்பனுர்:— அப்படியாஞல் தினமும் நீ என்னுேடு வா. பல செய்திகளை அறியலாம்.

II

தகப்பனுர்:— இதுதான் நமது தோட்டம். அதோ பார். கிழக்கே ஒரு பகுதி கரும்புப் பயிர். மேற்கே

காண்பது சோளப் பயிர். வடக்கில் கத்தரி, வெண்டை, பச்சைமிளகாய், கொத்தவரை முதலான காய்கறிச் செடிகள் உள்ளன. தெற்கே புகையிலை பயிரிடப்பட்டுள்ளது.

சுந்தரம்:– நான்கு திக்குகளிலும் நான்கு வகைப் பயிர்கள் பயிரிடப் பட்டுள்ளனவே!

தகப்பனுர்:- நான்கு திசைகளின் பெயர்களைச் சொல்.

சுந்தரம்:- இது தெரியாதா! கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு.

தகப்பனுர்:- இங்கே பார். இது தோட்டக் கிணறு. இது வீட்டிலிருக்கும் கிணற்றைப் போல் இல்லையல்லவா? இது மிகப் பெரியது. இதன் ஒரு பக்கத்தில் தண்ணீர் இறைக்க ஏற்றம் அமைத்துள்ளதைக் கவனி. இது ஏற்றக் கிணறு எனப்படும்.

சுந்தரம்:- ஏற்றம் இறைப்பது எப்படி?

தகப்பனுர்:- இரண்டு மாடுகள் கட்டி ஏற்றம் இறைக்கிருர்கள். தோலினுல் ஆகிய பெரிய பரி கீழே இறங்குவதைக் கவனி. மாடுகள் கிணற்றின் விளிம்பு வரை வரும். பரி நீரை முகந்துகொள்கிறது. அதோ பார்.



மாடுகள் கிணற்றை விட்டுத் தூரம் செல்கின்றன. பரியின் நீர் மேலே கொண்டு வரப்பட்டு வாய்க்

காலில் ஊற்றுகிறது. வாய்க்கால் வழியாக நீர் பயிர்களுக்குப் பாய்கின்றது. மாடுகள் முன்னும் பின்னும் செல்கின்றன, பார்.

சுந்தரம்:- இது வேடிக்கையாக இருக்கிறது!

தகப்பஞர்:- இன்று நேரம் ஆயிற்று. நாளைக்கு வரலாம்.

சுந்தரம்:- நான் இனித் தினமும் தோட்டத்திற்கு வருவேன்.

அரும் பதங்கள்

முயற்சி	*எளிய*	*பரி*
தேர்வு	*காரியம்*	*இறைக்க*
பரிசு	*பகுதி*	*விளிம்பு*
மகிழ்ச்சி	*திக்கு*	*ஏற்றம்*
இறங்கு	*பாய்கின்றது*	*வாய்க்கால்*

விஞக்கள்

1. மாணவர்கள் எவற்றை நன்கு கற்கவேண்டும்?
2. தோட்டத்தில் விளைவன எவை?
3. நீர் இறைத்தலைப் பற்றி எழுது.

பயிற்சி

1. பரிசு, மகிழ்ச்சி, காரியம், திசை, விளிம்பு, வாய்க்கால் -இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுது.

2. தோட்டம் ஒன்றைச் சென்று பார். அங்குக் காண்பனவற்றைப் பற்றி எழுது.

3. நான்கு திசைகள் எவை?

உன் வீடு, அல்லது ஊர், அல்லது பள்ளிக்கூடம் என்பதின் நான்கு திசைகளிலுமுள்ளவற்றைக் கூறு.

4. சில காய்களின் பெயர்களை எழுது.



16. தென்னை மரம்

நம் நாட்டில் எங்கும் தென்னை மரத்தையும், வாழை மரத்தையும் காணலாம். இந்த இரண்டு மரங்களும் மக்களுக்கு மிகவும் முக்கியமானவை. இவற்றின் ஒவ்வொரு பாகமும் நமக்குப் பயன் படுகின்றன.

தென்னை மரம் வெப்பமுள்ள நாடுகளில் ஓங்கி வளரும். தென்னைமரம் மணற்பாங்கான இடங் களிலும், கடற்கரை ஓரங்களிலும் செழித்து வளரும். தென்னை நாற்பது, ஐம்பது அடி உயரம் வளரும். தென்னை, பனை, பாக்கு என்னும் மரங்கள் ஓர் இனம். தென்னை மரத்திற்குக் கிளைகள் இல்லை. தென்னை மரத்தின் உச்சியில் மட்டைகள் இருக்கின் றன. அவைகளின் இருபுறங்களிலும் ஓலைகள் உள்ளன. தென்னை மரத்தில் புதுப்புது குருத்துகள்

தோன்றும். அவை வளர்ந்து மட்டைகள் ஆகும். புது மட்டைகள் தோன்றப் பழைய மட்டைகள் விழுந்து விடும்.

தென்னை மரத்தில் பாளைகள் தோன்றும். அப் பாளைகளில் பூக்கள் இருக்கும், பாளை வெடித்துப் பூக்களிலிருந்து பிஞ்சுகள் உண்டாகும். அப்பிஞ்சு களைக் குரும்பை என்பர். குரும்பை பருத்துத் தேங்காய் உண்டாகும். தேங்காய் குலைகுலையாய்க் காய்க்கும். முற்றாத காய்க்கு இளநீர் என்று பெயர். வெய்யில் காலத்தில் இளநீர் குடிக்க மிக இன்ப மாய் இருக்கும்.

தேங்காயின் மேற்புறத்தில் வழவழப்பான மட்டை உண்டு. அதற்குள் ஓடு இருக்கிறது. அது உறுதியானது. அதனுள் வெண்மையான பருப்பு இருக்கிறது. தண்ணீரும் அதனுள் காணலாம். பருப்பும் தண்ணீரும் சுவையாய் இருக்கும். முற்றிய தேங்காய்க்குக் கொப்பரை என்று பெயர். கொப்பரையிலிருந்து எண்ணெய் எடுப்பார்கள். தேங்காய் எண்ணெய் சோப்பு செய்யவும் சமையல் செய்யவும் உதவும். அது புண்ணையும் ஆற்றும்.

தென்னை மட்டையில் அடர்த்தியான நார் உண்டு. அது கயிறு திரிக்க உதவும். தேங்காய் ஓடுகளைக் கொட்டங்காய்ச்சி என்பர். அதனைக் கொண்டு அகப்பை, பொத்தான் என்பன செய்ய லாம். ஓலையைக் கிழித்துத் துடைப்பம் செய்வார் கள். தென்னை மட்டைகளின் ஓலைகளைப் பின்னிக் கீற்று செய்வார்கள். கீற்று குடிசைகளுக்குக் கூரை போட உதவும். தென்னை ஓலையின் நடுவில் உள்ளது

ஈர்க்கு எனப்படும். சிறு தென்னை மரத்தைத் 'தென்னம் பிள்ளை' என்பர். தென்னை மரங்கள் மிகுந்து வளர்ந்த இடத்திற்குத் தென்னந் தோப்பு என்பர். ஓலை, மட்டை, மரம், கொட்டங்காய்ச்சி முதலியன அடுப்பு எரிக்க உதவும்.

அரும் பதங்கள்

முக்கியமானவை	இருபுறம்	குலை குலையாய்
பாகம்	ஓலைகள்	இள நீர்
மணற்பாங்கான	மட்டை	மேற்புறம்
இனம்	பாளை	வழவழப்பு
பருப்பு	கொப்பரை	எண்ணெய்
சோப்பு	அர்த்தியான	கொட்டங்காய்ச்சி
கழித்து	துடைப்பம்	ஈர்க்கு

வினாக்கள்

1. தென்னை மரம் எங்கு மிகுந்து வளரும்?
2. தென்னை மரம் எவ்வினத்தைச் சேர்ந்தது?
3. இளநீர், கொப்பரை என்பன யாவை?
4. தென்னை மரத்தின் ஒவ்வொரு பாகமும் உபயோகப் படுகிறது என்பதை விளக்கு?
5. தென்னையைக் கொண்டு செய்யக்கூடிய கைத்தொழில் கள் யாவை?

பயிற்சி

1. தென்னம்பிள்ளை, தென்னந்தோப்பு - என்றால் என்ன?

2. தென்னை ஓலை, நார், கொட்டங்காய்ச்சி இவற்றால் செய்யக்கூடிய பொருள்களை எழுது.

3. தென்னை மரத்திற்கு எவை இல்லை?

4. தென்னை மரத்தைபோல் முழுப்பாகமும் உபயோக மாகும் மரம் ஒன்று சொல்.

5. குலைகுலையாய், வழவழப்பாய் — இவற்றைத் தனித் தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.



17. ஆடுகள்

உலகில் பலவகை மிருகங்கள் உள்ளன. அவற்றைக் காட்டு மிருகங்கள், வீட்டு மிருகங்கள் என இருவகையாகப் பிரிக்கலாம். வீட்டு மிருகங்கள் பசு, எருது, எருமை, ஆடு, குதிரை, கழுதை, நாய் முதலியன. புலி, கரடி, சிங்கம், யானை, மான் முதலியன காட்டு மிருகங்கள்.

வீட்டு மிருகங்களில் மிகவும் சாதுவான பிராணி ஆடு. ஆட்டின் கால்களில் பிளவுபட்ட குளம்புகள் உண்டு. ஆட்டின் வால் குட்டையானது. 'ஆட்டிற்கு வால் அளந்து வைத்தான்' என்பது பழமொழி. ஆடு மாடுகள் குடியானவனுக்கு மிகவும் அவசியமாகும். அவையே அவன் செல்வம் என்னலாம்.

ஆடுகளில் வெள்ளாடு, செம்மறியாடு, குறும்பையாடு, பள்ளையாடு எனப் பலவகை உண்டு. பள்ளையாடு மிகவும் குட்டையாக இருக்கும். அது அதிகமாகப் பால் கொடுக்கும்.

வெள்ளாடு பெரும்பாலும் கருநிறமுடையது. இதன் கொம்புகள் மெலிந்து நீண்டு இருக்கும். வளைந்த கொம்புகளை உடைய ஆடுகளும் உண்டு. வெள்ளாடு செங்குத்தான பாறைகளில் சிறிதும் அஞ்சாமல் ஏறும். அது பின்கால்களை நிலத்தில் ஊன்றிக் கொண்டு முன்கால்களால் மரத்தைப் பற்றித் தழைகளைத் தின்னும்; முழங்கால் படியிட்டு நீர் குடிக்கும்.

செம்மறி யாடு செந்நிறம் உடையது; குட்டை யாக இருக்கும். இதன் கொம்புகள் திருகலாக இருக்கும். செம்மறி யாட்டிற்கு உடலில் உரோமம் அடர்ந்திருக்கும். அவற்றைக் கத்தரித்துக் கம்பளி நெய்வார்கள்.

குறும்பை யாடு விநோதமானது. இவ்வகை ஆடுகள் காஷ்மீர் தேசத்தில் அதிகமாகக் காணப் படுகின்றன. இதன் உடலில் நீண்ட உரோமம் அடர்த்தியாக இருக்கும். குளிர் காலத்தில் இந்த மயிர் இவ்வாட்டிற்குப் போர்வை போல் உதவு கிறது. வெயில் காலத்தில் இந்த உரோமத்தைக் கத்தரித்து விடுவார்கள். இந்த உரோமத்தால் கம் பளம் நெய்யலாம்.

ஆடுகள் மந்தை மந்தையாக மேயும். ஆடு இலை, தழை, புல் பூண்டுகளைத் தின்னும்.

ஆட்டுத் தோலும் ஆட்டு மாமிசமும் மக் களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. ஆட்டின் பால் உடம்பிற்கு மிகவும் நல்லது. உடலிற்கு வலி மையைத் தரும். ஆனால், வடிகட்டி உபயோகிக்க வேண்டும். ஆட்டுப்பால் குழந்தைகளுக்கு மருந்

தாக உபயோகப்படுகிறது. ஆட்டுப் புழுக்கை வயலுக்கு நல்ல உரமாகும். ஆட்டுத்தோல் செருப்பு, சேணம், பை முதலியன தைக்க உதவும்.

அரும் பதங்கள்

சாதுவான	பலவகை	மெலிந்து
குடியானவன்	பிளவுபட்ட	வளைந்த
அவசியம்	குளம்புகள்	செங்குத்தான
ஊன்றி	பெரும்பாலும்	பாறை
செந்நிறம்	தழை	படியிட்டு
கத்தரித்து	திருகல்	வழக்கம்
விநோத	அடர்ந்து	கம்பளி
வடிகட்டி	வலிமை	போர்வை
உரம்	புழுக்கை	மந்தைமந்தையாக

வினாக்கள்

1. வீட்டு மிருகம், காட்டு மிருகம் — என்பவை ஒவ்வொன்றிற்கும் உதாரணங்கள் தருக.
2. ஆடுகளில் எத்தனை வகை உண்டு?
3. பள்ளையாடு, செம்மறியாடு, வெள்ளாடு, குறும்பையாடு இவை பற்றி அறிவதென்ன?
4. ஆட்டுப்பால் எத்தகையது?
5. ஆடுகள் எவ்வாறு மேயும்?
6. ஆட்டின் உபயோகங்களைக் கூறு.

பயிற்சி

1. குடியானவன், அவசியம், விநோதம், கத்தரித்து, பலவகை, பெரும்பாலும், அடர்ந்து, வலிமை, மெலிந்து, வழக்கம் — இவற்றைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.
2. மந்தை மந்தையாக – வாக்கியத்தில் அமைத்து எழுது.
3. தலை, தளை, தழை, தயை, தடை, தரை — உச்சரித்துப் பார்.

18. ஐந்து பிராணிகள்

பாலைப் பொழிந்துதரும் பாப்பா — அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா;
வாலைக் குழைத்து வரும் நாய்தான் — அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா;

வண்டி இழுக்கும் நல்ல குதிரை — நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு — அவற்றை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

— சி. சுப்பிரமணிய பாரதியார்



19. பறவைகள்

பிள்ளைகளே, நீங்கள் பறவைகளைப் பார்த்திருக்கின்றீர்கள் அல்லவா? வீடுகளில் நீங்கள் பார்க்கும் பறவைகள் யாவை? கோழி, காகம், குருவி, புரு, வாத்து, மைனு, கிளி முதலியன அல்லவா?

மயில், குயில், கருடன், கழுகு, பருந்து, ஆந்தை, தீப்பறவை என்பன வேறு சில உள்ளன. கொக்கு நாரை முதலியனவும் உள்ளன. நீங்கள் தோட்டம், ஆற்றோரம், காடு என்னும் இடங்களுக்குச் சென்றால் பின்னும் பலவிதப் பறவைகளைப் பார்க்கலாம்.

பறவைகளைக் கவனித்துப் பாருங்கள். அவை எவ்வளவு அழகாய் இருக்கின்றன! அவை ஆகாயத்தில் பறப்பதனால் பறவை என்னும் பெயர்

பெற்றன. அவை நிறத்தாலும் வடிவத்தாலும் வேறுபட்டுள்ளன.

பறவைகள் எவற்றைக் கொண்டு பறக்கின்றன? அவை பறக்க உதவியாயிருப்பன இறக்கைகள். இறக்கைகளில் சிறியவை, பெரியவை உண்டு. சிறிய இறக்கைகள் உடலைக் காக்கின்றன; பெரிய இறக்கைகள் பறக்க உதவுகின்றன. பெரிய இறக்கைகள் பறக்கும் பொழுது விரிகின்றன. மற்ற காலங்களில் உடலைச் சட்டைபோல் காக்கின்றன. நீளமான இறக்கைகளை உடைய பறவைகள் ஆகாயத்தில் மிக உயரம் பறக்கும். குறுகிய இறக்கைகளையுடைய பறவைகள் அவ்வளவு உயரம் பறப்பது இல்லை.

பறவைகளின் உடல் இலேசானது. அவற்றின் இரத்தம் வெப்பமானது. தரையில் நடக்கும் பறவைகளின் கால்கள் நீளமானவை.

பறவைகளின் மூக்கிற்கு ‘அலகு’ என்று பெயர். பறவைகளின் அலகுகளைக் கவனி. அவை பல வகைப்பட்டனவாகும். பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். முட்டைகளும் அளவு நிறம், வடிவம் என்பவற்றுல் வேறுபடும். சிறிய பறவைகள் அதிகமான முட்டைகள் இடும். பெரிய பறவைகள் குறைவான முட்டைகள் இடும். பறவைகள் முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்க அடைகாக்கும். அதனுல் வெப்பம் ஏற்பட்டு முட்டை வெடித்துக் குஞ்சு வெளிப்படும். குஞ்சு இரைதேடி உண்ணும் வரை தாய்ப்பறவை உணவு அளித்துக் காக்கும்.

கோழி அதிகாலையில் கூவுகிறது. கிளி பேசுகிறது. புரு மிக உயரமாக வானத்தில் பறக்கிறது. மயில் தோகை விரித்து ஆடுகிறது. வாத்து நீரில் நீந்துகிறது. கருடன் வட்டமிடுகிறது. கொக்கு நீண்ட கால்களை உடையது. மீன்கொத்தி குளக்கரையில் அமர்ந்திருக்கும். இவைகளைக் காண்பது மனத்திற்கு இன்பம் விளைக்கும் அல்லவா?

அரும் பதங்கள்

ஆற்றோரம் | **இறக்கை** | **இரத்தம்**
ஆகாயம் | **நீளமான** | **வெப்பம்**
வேறுபட்டு | **குறுகிய** | **உறுதி**
அழகு | **பொரிக்கும்** | **பரிகாசம்**
வானம் | **அடைகாத்தல்** | **நீந்து**
அமர்ந்து | **தோகை** | **விளைக்கும்**

வினாக்கள்

1. பறவைகளில் சிலவற்றைக் கூறு.
2. பறவை என்று பெயர் வரக் காரணம் என்ன?
3. இறக்கைகளைப் பற்றி நீங்கள் அறிவன யாவை?
4. எவ்வகைப் பறவைகள் ஆகாயத்தில் உயரப் பறக்கும்?
5. பறவைகளின் உடல், கால்கள், மூக்கு பற்றி அறிவன யாவை?

பயிற்சி

1. பெரிய × சிறிய-இதுபோல் எதிர்ப்பதங்களை எழுது.
   நீளம் ×
   உயரம் ×
   வெப்பம் ×
   நெட்டை ×

2. கிளி, புரு, மயில், வாத்து, கருடன், கொக்கு — இவைகளைப்பற்றி ஒவ்வொரு வாக்கியம் எழுது.



20. கிளி

1. பச்சைக் கிளியே வா வா
பாலும் சோறும் உண்ணவா
கொச்சி மஞ்சள் பூசவா
கொஞ்சி விளையாட வா.

2. கவலை எல்லாம் நீங்கவே
களிப்பு எழுந்து பொங்கவே
பவள வாய் திறந்து நீ
பாடுவாயோ தத்தம்மா !

3. வட்டமாய் உன் கழுத்திலே
வானவில்லை ஆரமாய்
இட்ட மன்னர் யார் அம்மா.
யான் அறியக் கூறு அம்மா.

4. பையப் பையப் பறந்துவா
பாடிப் பாடிக் களித்து வா
கையில் வந்து இருக்க வா
கனி அருந்த ஓடிவா.

— தேசிக விநாயகம் பிள்ளை.

பயிற்சி

படத்தில் என்ன காண்கிருய்? கதையாகச் சொல் எழுது.



கீழே கோடுள்ள இடங்களில் வார்த்தைகளை அமைத்துக் கதையைப் பூர்த்தி செய்:—

1. ஒரு — சிங்கம் காட்டில் —.
2. அது ஒரு நாள் — கொண்டிருந்தது.
3. அதன் மீது ஒரு — ஏறி ஏறி விளையாடிற்று.
4. சிங்கத்திற்குத் — கலைந்தது.
5. சிங்கத்திற்குக் — வந்தது.
6. சிங்கம் சுண்டெலியைப் — கொல்லப் போயிற்று.
7. சுண்டெலி பயந்து தன்னை — கேட்டது.
8. சிங்கம், '— பிராணியே, மன்னித்தேன், போ'. என்றது.
9. ஒரு நாள் சிங்கம் — தேடப் போயிற்று.
10. வேடன் ஒருவன் — விரித்திருந்தான்.
11. வலையில் — அகப்பட்டுக் கொண்டது.
12. சிங்கம் —.
13. சுண்டெலி — கர்ஜனையைக் கேட்டு ஓடிற்று.
14. சுண்டெலி பற்களால் —த் துண்டு துண்டாகக் கடித்தது.
15. சிங்கம் வெளியே —.

21. ஒற்றுமையே பலம்

ஒரு காட்டில் பல புருக்கள் வசித்து வந்தன. அவைகளுக்கு அரசனாக ஒரு புரு இருந்தது. அவைகள் எங்கும் பறந்து சென்று இரை தேடும். அக்காட்டிற்கு வேடன் ஒருவன் வந்தான். அவன் புருக்களைப் பிடிக்க எண்ணினான். அவைகளைப் பிடிக்க ஒரு தந்திரம் செய்தான். நிலத்தின் மேல் தானியத்தைப் பரப்பினான். தானியத்தின் மேல் வலையை விரித்திருந்தான். வலை மிகவும் மென்மையானது.

தானியத்தை விரும்பிவரும் பறவை வலையில் அகப்பட்டுக் கொள்ளும் அல்லவா? அவன் ஒரு மரத்தின் பின்னே ஒளிந்து கொண்டான். புருக்கள் பறந்து வந்தன. அவை தானியத்தைக் கண்டன. அவை தானியத்தைத் தின்ன ஆசை கொண்டன. அவை கீழே இறங்கின. "காட்டில் தானியம் ஏது? அவசரப் படாதீர்; இதில் ஏதோ சூது இருக்க வேண்டும்" என்று புரு அரசு சொன்னது. ஆனால்

புருக்கள் அதன் பேச்சைக் கேட்கவில்லை. அவைகள் தானியத்தைத் தின்னப் போய் வலையில் அகப்பட்டுக் கொண்டன. வேடன் மகிழ்ந்தான்; ஓடி வந்தான். புருக்கள் அவனைப் பார்த்தன. 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்பதை மறந்தோமே என்று அவை வருந்தின. குடிகளைக் காப்பது அரசன் கடமை அல்லவா? தன் இனத்தவரைக் காக்கப் புரு அரசு ஒரு தந்திரம் கூறிற்று.

"நீங்கள் எல்லாரும் வலையோடு பறக்க வேண்டும். எனக்கு ஒரு நண்பன் இருக்கிறான். அவன் எலிகளுக்கு அரசன். அவன் எனக்கு உதவி செய்வான். நம்மை இவ்வலையினின்று விடுவிப்பான். அங்கு செல்வோம். எல்லாரும் வலையோடு பறப்போம். அதோ வேடன் வருகிறான்," என்று புரு அரசு கூறிற்று.

புருக்கள் எல்லாம் வலையோடு பறந்தன. வேடன் சிறிது தூரம் அவற்றின் பின் ஓடினான்; பின், பயன் இல்லை என்று அவன் திரும்பினான்.

புருக்கள் எலி அரசனிடம் சென்றன. எலி அரசன் தன் பரிவாரங்களுடன் வந்தான். அவை களை விடுவித்தான். புருக்கள் மிகவும் மகிழ்ந்தன.

அரும் பதங்கள்

ஒற்றுமை	*விரித்து*	*ஒளி*
இரை	*வலை*	*அவசரம்*
தானியம்	*மென்மை*	*சூது*
பரப்பு	*அகப்படு*	*அரசு*
மூத்தோர்	*வார்த்தை*	*அர்த்தம்*
மறந்தோம்	*வருந்தின*	*கடமை*
நண்பன்	*பரிவாரம்*	*விடுவி*

வினுக்கள்

1. வேடன் என்ன எண்ணினுன்?
2. அவன் என்ன செய்தான்?
3. வலை எத்தகையது?
4. ஏன் வலையை விரித்தான்?
5. வேடன் யாது செய்தான்?
6. புருக்கள் என்ன செய்தன?
7. புருக்களுக்கு நேர்ந்தது என்ன?
8. புரு அரசு கூறியது என்ன?
9. புருக்கள் என்ன கூறி வருந்தின?
10. அரசன் கடமை யாது?
11. புரு அரசு கூறிய தந்திரம் யாது?
12. புரு அரசனின் நண்பன் யார்?
13. வேடன் யாது செய்தான்?
14. எலி செய்த உதவி யாது?
15. இப்பாடத்தால் அறியும் நீதிகள் யாவை?

பயிற்சி

1. இரை – இறை
இரங்கு – இறங்கு
ஒளி – ஒலி
வலை – வளை
தலை – தளை
வாழை – வாளை – வாலை

இவற்றை உச்சரி. அர்த்தத்தைச் செவ்வையாக அறிந்து கொள்.

2. இந்தக் கதையைச் சொல், எழுது.

22. நம் நாடு

நாம் வாழும் தேசத்தின் பெயர் என்ன? நம் தேசத்திற்கு இந்தியா என்று பெயர். இதனைப் பாரத தேசம் என்றும் அழைப்பார்கள். நம் தேசம் மிகவும் செழிப்பானது. நம் தேசத்தில் அநேக மலைகள் இருக்கின்றன. இமயமலை என்பது ஒன்று. அது வெண்பனியால் மூடப் பட்டிருக்கும். அதற்குப் பனிமலை என்று பெயர். அது இத்தேசத்தின் வடக்கே உள்ளது.

விந்தியமலை என்பது மற்றொன்று. அது இந்தியாவின் நடுவில் உள்ளது. கிழக்கு மலைத் தொடர்கள் கிழக்கில் உள்ளன. மேற்கு மலைத் தொடர்கள் மேற்கில் உள்ளன. இவ்விரண்டும் இந்தியாவின் தென் பகுதியில் உள்ளன.

கங்கை, சிந்து, பிரமபுத்திரா, நருமதை, தபதி, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணை, வடபெண்ணை, தென் பெண்ணை, பாலாறு, காவேரி, வைகை, தாம்பிரபரணி என்னும் ஆறுகள் இத்தேசத்தில் உள்ளன. இவை பெரிய ஆறுகள். இவைகளை நதிகள் என்றும் கூறுவர். இவற்றால் இந்நாடு மிக்க வளமுடையதாகும்.

இந்நாட்டில் பல பெரிய கோயில்களும் பல அழகிய கட்டிடங்களும் உள்ளன. தாஜ்மஹால் என்பது ஓர் அழகிய கட்டிடம். நம்நாட்டு மக்கள் வேளாண்மைத் தொழிலைச் செய்கின்றனர்.

வேளாண்மை என்பது பயிர்த் தொழில். இதனை விவசாயம், உழவு என்றும் கூறுவர். இந்நாட்டில் நெல், கோதுமை, கரும்பு, சோளம், கம்பு, கேழ் வரகு விளைகின்றன. துவரை, உளுந்து, எள்ளு, கடலை, மொச்சை, பயறு முதலியனவும் ஏராளமாக விளைகின்றன.

மா, வாழை, பலா, கொய்யா, மாதுளை முதலான பழந்தரும் மரங்களும் உள்ளன. தென்னை மரம் நம் நாட்டில் அதிகம். ஆதலால், தேங்காயும் அதிகம். திராட்சைத் தோட்டங்களும் உள்ளன. ஆரஞ்சுப் பழமும் முலாம் பழமும் ஏராளமாகப் பயிராக்கப் படுகின்றன. சந்தனம், தேக்கு முதலான மரங்கள் நிறைந்த காடுகளும் உள்ளன.

இவ்வளவு சிறப்பு உடையது நமது இந்திய தேசம். இது நம் தாய் நாடு. தாய் நாட்டைத் தாய் போல் நேசிக்க வேண்டும் அல்லவா?

"தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா."

அரும் பதங்கள்

தேசம்	***நதி***	***விவசாயம்***
செழிப்பு	***வளம்***	***ஏராளமாக***
வெண் பனி	***வேளாண்மை***	***நேசிக்க***
மலைத் தொடர்கள்	***உழவு***	***பயிர்த்தொழில்***

வினாக்கள்

1. நம் தேசத்தின் பெயர் யாது?
2. இத்தேசத்திற்கு வேறு பெயர் யாது?
3. பனிமலை எதனைக் குறிக்கும்? ஏன் அப்பெயர் வந்தது? எங்குள்ளது? வேறு பெயர் யாது?

4. நம் தேசத்திலுள்ள வேறு மலைகளின் பெயர்களைக் கூறு.

5. நம் தேசத்திலுள்ள ஆறுகள் யாவை?

6. நம் நாடு செழிப்பு மிக்க நாடு என்பதற்குக் காரணம் என்ன?

7. இந்நாட்டின் சிறப்பு என்ன?

8. இந்நாட்டு மக்களின் தொழில் யாது?

9. வேளாண்மையால் விளைவன எவை?

10. காடுகளில் விளையும் மரங்கள் எவை?

11. பழம் தரும் மரங்கள் சில கூறு?

பயிற்சி

1. தேசம், செழிப்பு, நதி, ஏராளமாக, நேசிக்க, தொடர்ச்சி – இவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. நாம் ஏன் தாய் நாட்டை வணங்க வேண்டும்?



23. நமது தேசக் கொடி

1. கொடி பறக்குது கொடி பறக்குது
கொடி பறக்குது பாரடா.
கோணல் அற்ற கோலில் எங்கள்
கொடி பறக்குது பாரடா.

2. உடல் உழைத்து பொருள் கொடுத்து
உயிரும் தந்த உத்தமர்
உண்மையான தேச பக்தர்
ஊன்றி வைத்த கொடி இது
கடல் கொதித்து என்ன மிக்க
கஷ்டம் வந்த போதிலும்
கட்டி நின்று விட்டிடாமல்
காக்கவேணும் நாம் இதை.

3. மனம் உவந்து உயிர் கொடுத்த
மானம் உள்ள வீரர்கள்
மட்டில்லாத துன்பமுற்று
நட்டு வைத்த கொடி இது.
தனம் இழந்து கனம் இழந்து
தாழ்ந்து போக நேரினும்
தாயின் மானம் ஆன இந்தக்
கொடியை என்றும் தாங்குவோம்.

ஆஸ்தான கவிஞர்
நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளை.

24. விடுகதைகள்

ஜாடி மேல் குரங்கு.



எங்கள் அம்மான் வீட்டுத் தோட்டத்திலே, மஞ்சள் கிளி ஊஞ்சல் ஆடுகிறது.



அப்பன் சொரியன்,
ஆத்தாள் சடைச்சி,
அவர்கள் பிள்ளைகள்
சர்க்கரைக் கட்டி.



தடுக்குப் போட்டால்
தடுக்கு எடுக்க முடியாது.
அது யாது?

சிவப்பு நிறம் உடையேன்,
நடுத்தெருவில் நான் இருப்பேன்,
வாயும் பெரியதே,
வாய்க்கு உணவு காகிதம்.
நான் யார்?



25. மகாத்மா காந்தி

இவர் மகாத்மா காந்தி. இவரது முழுப்பெயர் மோகனதாஸ் கரம் சந்திர காந்தி. இவர் நம் நாட்டுப் பெருந்தலைவர். காந்திக்கு இந்திய மக்களிடம் அன்பு அதிகம். இவர் இந்தியாவிற்குச் சுதந்தரம் வாங்கி அளித்தார். இவர் பெயர் வாழ்க!

நம்முடைய ஏழ்மையைப் போக்க அரும்பாடு பட்டார். இவருக்குக் கடவுளிடத்தில் நிரம்பப் பக்தி உண்டு. இவர் கடவுளைக் குறித்துத் தினமும் பிரார்த்தனை செய்தார்.

இவர் எல்லாரிடத்திலும் இனிமையாகப் பேசினார். மறந்தும் இவர் பொய் சொன்னது இல்லை. மக்கள் கள் குடிப்பதை இவர் வெறுத்தார்; கள் குடியை நிறுத்தப் பாடுபட்டார்.

இவர் குழந்தைகளிடத்தில் அன்பாய் இருந்தார். இவர் எளிய உடையையே உடுத்தினுர். இவர் நாள் தோறும் இராட்டினம் சுற்றி நூல் நூற்று வந்தார்.

இவர் 1948–ஆம் வருஷம் ஜனவரி மாதம் 30-ஆம் தேதி இறந்தார். இவர் இறந்தது கேட்டு உலகமெங்கும் மக்கள் வருந்தினர்.

இவர் தமக்கென வாழவில்லை; பிறர் நலத்திற்காகவே வாழ்ந்தார். இந்திய மக்களின் நன்மைக்காகவே இவர் ஆயுள் முழுவதும் உழைத்தார். இவரைப் போற்ருத மக்கள் இல்லை; புகழாத மக்கள் இல்லை.

இவர் பல முறை சிறைக்குச் சென்றிருக்கிருர். இவர் பெயர் குழந்தைகளுக்கும் தெரியும். 'காந்தித் தாத்தா' என்று இவர் படத்தைக் காணும் குழந்தைகள் கூறுவதைக் கேட்டிருக்கிருயே! மகாத்மா காந்தி ஒரு பெரிய மகான். இவரை இந்தியர்கள் மறக்கவே முடியாது.

இவரைப் பின்பற்றி நடப்பவர் ஜவகர்லால் நேரு. காந்தி சுதந்தரம் வாங்கி அளித்தார். சுதந்திர இந்தியாவின் தலைவராய் விளங்குபவர் ஜவகர்லால் நேரு. ஜவகர்லாலைக் காந்தி 'மாந்தருள் மாணிக்கம்' என்று கூறினுர். மகாத்மா வாக்கு பொய்யாகுமா! ஜவகர் மிகத் திறமையோடு இந்தியாவிற்கு வேண்டுவன செய்து வருகிருர். மனிதருள் மாணிக்கமாக ஜவகர் விளங்குகிருர்.

அரும் பதங்கள்

பெருந் தலைவர்	அரும்பாடு	வெறுத்தார்
சுதந்தரம்	நிரம்ப	குறித்து
வாக்கு	பிரார்த்தனை	கள்குடி
ஏழ்மை	மறந்தும்	எளிய
உடை	இராட்டினம்	பிறர் நலம்
ஆயுள்	போற்றாத	சிறை
மகான்	பின்பற்றி	மாந்தர்
மாணிக்கம்	விளங்குகிறார்	நீடு

வினாக்கள்

1. காந்தியின் முழுப் பெயர் யாது?
2. காந்தி இந்திய மக்களுக்குச் செய்தது என்ன?
3. காந்தி எப்படிப்பட்டவர்?
4. காந்தி எதனை வெறுத்தார்?
5. காந்தி தினந்தோறும் யாது செய்து வந்தார்?
6. காந்தியின் இயல்புகளை விளக்கு
7. ஜவகர்லால் நேரு யார்?
8. ஜவகர்லாலைக் காந்தி எவ்வாறு கூறுகிறார்?

பயிற்சி

1. ஏழ்மை, வாழ்க, மகான், மாணிக்கம், மறந்தும், போற்றாத, பின்பற்றி, குதித்து, பிறர்நலம்——இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுது.

2. 'மறந்தும் இவர் பொய் சொன்னதில்லை'.——வேறு எவ்விதமாக மாற்றிக் கருத்துக் கெடாமல் இவ்வாக்கியத்தை எழுதலாம்?

3. இவர் நாள் தோறும் இராட்டினம் சுற்றி நூல் நூற்று வந்தார். — இதனால் நீ என்ன அறிகிறாய்?

4. காந்தியின் சிறந்த குணங்களை விளக்கி எழுது.

செய்யுட் பகுதி

1. ஆத்திசூடி

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண் எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புர ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. அஃகம் சுருக்கேல்.
14. தெய்வம் இகழேல்.
15. நூல்பல கல்.
16. சான்றோர் இனத்திரு.
17. கீழ்மை அகற்று.
18. நன்றி மறவேல்.
19. தந்தை தாய்ப் பேண்.
20. நாடு ஒப்பன செய்.

குறிப்புரை

1. அறம் – தருமம்.
2. சினம் - கோபம்.
3. இயல்வது – செய்யக்கூடியது கரவேல் - மறைக்காதே.
4. ஈவது - கொடுப்பது.
5. உடையது - தம்மிடம் உள்ள செல்வத்தை.
   விளம்பேல் - சொல்லாதே.
6. ஊக்கம் - மன எழுச்சி.
7. எண் – கணிதம்.
   எழுத்து - செய்யுள் முதலிய இலக்கியம்.
8. ஏற்பது – பிச்சை எடுப்பது.
   இகழ்ச்சி – பிறர் தாழ்வாக நினைக்கத் தக்கது.
9. ஐயம் – பிச்சை.
10. ஒப்புர – உபகாரம் செய்து, உலக நடை அறிந்து.
11. ஓதுவது – படிப்பது.
12. ஔவியம் - பொறுமையான சொற்களை.
13. அஃகம் – தானியம் முதலியன அளக்கும்பொழுது.
14. தெய்வம் – கடவுளை.
15. கல் - கற்றுக்கொள்.
16. சான்றோர் இனம் - மேலோர் கூட்டம்.
17. கீழ்மை – தாழ்வான எண்ணங்களையும் செயல்களையும்
18. நன்றி - பிறர் செய்த உபகாரத்தை.
19. பேண் - காப்பாற்று.
20. நாடு ஒப்பன - நாட்டில் உள்ள மக்கள் ஒப்புக்
    [கொள்ளும் காரியங்களை.

2. உலக நீதி

1. ஓதாமல் ஒரு நாளும்
இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்.
3. மாதாவை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.
4. நெஞ்சாரப் பொய்தனைச்
சொல்ல வேண்டாம்.
5. மனம் போன போக்கெல்லாம்
போக வேண்டாம்.
6. தருமத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.
7. கற்றவரை ஒரு நாளும்
பழிக்க வேண்டாம்
8. மூத்தோர் சொல் வார்த்தைதனை
மறக்க வேண்டாம்.
9. சேராத இடந்தனிலே
சேர வேண்டாம்.
10. செய்த நன்றி ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.
11. புண் படவே வார்த்தைகளைச்
சொல்ல வேண்டாம்.
12. கொலை களவு செய்வாரோடு
இணங்க வேண்டாம்.
13. மதியாதார் தலைவாசல்
மிதிக்க வேண்டாம்.
14. தெய்வத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

குறிப்புரை

1. ஓதாமல்—படிக்காமல்.
2. பொல்லாங்கு—தீமையான சொற்களை.
3. மாதா—தாய்.
4. நெஞ்சார—மனம் அறிய.
5. போக்கு எல்லாம்—போனவழிகளில் எல்லாம்.
6. தருமம்—ஒன்றும் எதிர் பாராமல் செய்யும் செயல்.
7. பழிக்க—இழிவாகப்பேச.
8. மூத்தோர்—அறிவாலும் வயதாலும் முதிர்ந்தோர்.
9. சேராத இடம்—நட்புக் கொள்ளத் தகாதவரிடம்.
10. செய்த நன்றி—ஒருவர் செய்த உபகாரத்தை.
11. புண்படவே—கேட்பவர் மனம் வருந்தும்படி.
12. கொலை—கொல்லுதல்.
    களவு—திருடுதல்.
    இணங்க—சிநேகிக்க.
13. மதியாதார்—மதிக்காதவர்
    தலைவாசல்—வீட்டு வாசல்.
14. ஒரு நாளும்—எந்த நாளிலும்

2c
A/10|12
2341